# அங்கத்துவ அமைப்பில்லாத திருச்சபையா!

வேதபூர்வமாக அமையும் திருச்சபைகளில் ஆரம்பத்தில் அமைக்கப்பட வேண்டியது முறையான அங்கத்துவமாகும். அதாவது, விசுவாசிகளைக் கொண்டு அமைக்கப்படுவது திருச்சபையாதலால் அந்தத் திருச்சபை முறையாக வேத போதனைகளைப் பின்பற்றி கர்த்தரின் பணிகளைச் செய்து வர அதற்கு அங்கத்தவர்கள் அவசியம். முறையான சபை அங்கத்துவம் காணப்படாவிட்டால் ஓர் ஆவிக்குரிய அமைப்பை சபையாகக் கருத முடியாது. ஏனெனில், அந்தச் சபையைப் போதனைகளைத் தந்து வழிநடத்த வேண்டிய போதகர்கள், உதவிக்காரர்களை சபை அங்கத்தவர்களே தெரிவு செய்ய வேண்டும். அங்கத்தவர்கள் இல்லாமல், அவர்கள் ஆராய்ந்து பார்த்து தெரிவு செய்யாமல் சபைத் தலைவர்கள் உருவாக வழியில்லை. வேதம் இப்படித்தான் போதிக்கிறது. ஆடுகள் இல்லாமல் மேய்ப்பன் இருக்க வழியில்லை. ஆடுகள் இருக்கின்றபோதே அவர்கள் மத்தியில் இருக்கிறவன் மேய்ப்பனாக அறியப்படுகிறான். இந்த உறவைப் பிரிக்க முடியாது. அநேக சபைகளில் சபைத் தலைவர்கள் தங்களைத் தாங்களே நியமித்துக் கொள்ளுவதும், தங்களுக்குப் பிடித்தமானவர்களை மட்டும் பணிகளுக்கு நியமிப்பதும் நாம் எங்கும் பார்க்கின்ற தவறான வழிமுறையாகும். சபையைக் கூட்டி சபை அங்கத்தவர்களைக் கலந்துகொள்ளாமல் அனைத்து ஆவிக்குரிய காரியங்களையும் நடத்திச் செல்லுகின்ற, வேதத்தில் இல்லாததொரு முறை இன்று எங்கும் இருந்து வருவதை நாம் மறுக்க முடியாது. இக்காரணங்களால் சபை அங்கத்துவ அமைப்பு பற்றி நாம்

ஆராய்வது அவசியமாகிறது. பத்தொன்பதாம் நூற்றாண்டைச் சேர்ந்த ஜோன் ஏன்ஜல் ஜேம்ஸ் (John Angel James) என்ற பெரியவர் சபை அங்கத்துவம் பற்றிப் பின்வருமாறு எழுதி யிருக்கிறார், "எவ்வாறு ஒரு நாட்டின் கட்டுப்பாடு, வளர்ச்சி ஆகியவற்றில் இருந்து அதன் அரசாங்கத்தை வேறுபடுத்திப் பார்க்க முடியாதோ அதைபோல சபை அமைப்பின்றி ஒரு சபையின் ஆத்மீக வளர்ச்சியை எண்ணிப் பார்க்க முடியாது. சபை அமைப்பு சபையின் ஆத்மீக வளர்ச்சியுடன் பிரிக்க முடியாத தொடர்பைக் கொண்டிருக்கிறது."

பொதுவாக சபை அங்கத்துவம் பற்றி நம்மினத்துக் கிறிஸ்தவர்கள் மத்தியில் பலவிதமான குழப்பமான கருத்துக்கள் இருந்து வருகின்றன. தெளிவானதும், கட்டுப்பாடுள்ளதுமான அங்கத்துவ அமைப்பில்லாமலேயே ஓய்வு நாளில் கூடி சபை என்ற பெயரில் ஆராதனை செய்து வருகிறவர்கள் நாடெங்களும் பரவிக் காணப்படுகிறார்கள். விசுவாசிகள் கூடிவருவதே சபை அதனால் அதற்கு அமைப்பு என்று ஒன்று அவசியமில்லை என்ற கருத்தை இவர்கள் கொண்டிருக்கிறார்கள். ஆதி சபைகள் தகுந்த அமைப்பைக் கொண்டு இயங்கி வந்துள்ளன என்பதை இவர்கள் வேதத்தை ஆராய்ந்து படித்துப் புரிந்துகொள்ளத் தவறியிருக்கிறார்கள். அத்தோடு இவர்களில் பலர் பாரம்பரியமாக இயங்கி வரும் சபைகள் அனைத்தும் ஆவியில்லாத சபைகள் என்ற கருத்தைக் கொண்டிருப்பதால் வரலாற்றில் இருந்து வந்திருக்கின்ற சபைகள் பின்பற்றி வந்திருக்கின்ற முறைகள் அனைத்துமே மனித சித்தத்தின் அடிப்படையில் ஏற்படுத்தப்பட்டவை என்ற தவறான எண்ணத்தையும் கொண்டிருக்கிறார்கள். இந்தக் காரணங்களும் இன்னும் பலவும் இவர்களுடைய கண்களை மறைத்து சபை அமைப்பு, அங்கத்துவம் என்பவை அவசியமற்றவை என்ற தவறான நம்பிக்கையை இவர்கள் வளர்த்துக்கொள்ள உதவியிருக்கின்றன.

மேலும் பலர் விசுவாசிகள் ஞானஸ்நானம் எடுப்பதன் மூலம் சபையில் இணைந்துகொள்வதால் அதுவே அவர் களுக்கு சபை அங்கத்துவத்தை அளித்துவிடுகிறது அதற்கு மேலாக எதுவும் செய்ய வேண்டியதில்லை, அங்கத்துவம்

பற்றிய போதனைகளும், விசாரணைகளும் அவசியமற்றவை என்று கருதுகிறார்கள். இதனால் இவர்களும் முறையான அங்கத்துவப் போதனைக் கொடுத்து அங்கத்துவ அமைப்பை சபையில் ஏற்படுத்துவதில்லை. பாப்திஸ்து சபைகள் மத்தியிலும், சகோதரத்துவ சபைகள் மத்தியிலும் இந்த முறையே பொதுவாகக் காணப்படுகின்றது. சபை அங்கத்துவம் உருவாக விசுவாசத்திற்கு அடுத்த படிக்கல்லாக ஞானஸ்நானம் இருப்பதை மறுக்க முடியாது. ஆனால், ஞானஸ்நானத்தை மட்டும் சபை அங்கத்துவத்திற்கு இருக்க வேண்டிய ஒரே தகுதியாகக் கருதுவது சரியல்ல. ஞானஸ்நானத்திற்கும் சபைக்குமுள்ள உறவை ஆராய்ந்து பார்க்கத் தவறுகிறவர்கள் ஞானஸ்நானத்தை மட்டும் சென்டிமென்டலாகப் பெரிதுபடுத்தி அதையே சபை அங்கத்துவத்திற்கான சகல தகுதிகளையும் அளிக்கும் கிருபையின் சாதனமாகத் தவறாகக் கருதுகிறார்கள்.

## வேதசத்தியங்கள் கொடுக்கப்பட்டிருக்கும் முறை

இந்த ஆக்கத்தில் சபை அங்கத்துவத்தின் அவசியத்தைக் கர்த்தர் தன்னுடைய வேதத்தில் எந்த முறையில் தந்திருக்கிறார் என்பதை ஆரம்பத்தில் விளக்க விரும்புகிறேன். சபை அங்கத்துவம் என்பது மனித சிந்தனையில் இருந்து புறப்பட்ட ஒன்றல்ல என்பதே என்னுடைய வாதம். அது வேதம் தெளிவாகப் போதிக்கும் சபை அமைப்புக்கு அவசியமானதும் இன்றியமையாததுமானதொன்று. வேதத்தில் அது வெளிப்படுத்தப்பட்டிருக்கும் முறை பற்றி நான் விளக்க வேண்டியது அவசிமாகிறது. கர்த்தரின் சித்தத்தின் மொத்தத் தொகுப்பே வேதமாகும். தன்னுடைய சித்தத்தைக் கர்த்தர் வேதத்தில் வெளிப்படுத்தியிருக்கும் முறை பற்றி நாம் அறிந்துகொள்ள வேண்டியது அவசியம். அதைக் கர்த்தர் திட்டவட்டமாக வெளிப்படையான போதனைகளின் மூலமும் (Explicit teaching), நாம் கருத்தோடு ஆராய்ந்து படித்துத் தெரிந்துகொள்ள வேண்டிய விதத்தில் உள்ளடக்கமாகவும் (Necessarily contained) வேதத்தில் தந்திருக்கிறார். முதலாவதற்கு நாம் பத்துக் கட்டளைகளை உதாரணமாகக் காட்டலாம். இரண்டாவதற்கு நாம் திரித்துவப் போதனையைக்

*குறிப்பிடலாம். பத்துக்கட்டளைகள் எந்தவிதமான குழப்பமுமில்லாமல் தெளிவாகக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. திரித்துவப் போதனைகள் உள்ளடக்கமாக பல பகுதிகளில் பரவிக் காணப்படுக்கின்றன. அவற்றை நாம் கருத்தோடு படித்தால் மட்டுமே திரித்துவத்தைப் பற்றிய விளக்கங்களைத் தெளிவாக அறிந்துகொள்ள முடியும். எல்லாப் போதனை களையும் கர்த்தர் வெளிப்படையாக பத்துக் கட்டளைகளைப் போல வேதத்தில் தரவில்லை. நாம் வேதத்தைக் கருத்தோடும், பயத்தோடும், உழைத்தும் படித்துக் கர்த்தருடைய சித்தங்களை அறிந்துகொள்ள வேண்டுமென்பதால் இந்த முறையில் எல்லாப் போதனைகளையும் கர்த்தர் வேதத்தில் தந்திருக்கிறார். ஆகவே, வெளிப்படையான போதனைகள் மட்டுமல்லாமல் வேதத்தில் வரலாற்றின் மூலமும், உவமைகள் மூலமும், உதாரணங்களின் மூலமும் உள்ளடக்கமாக விளக்கப்படும் போதனைகளும் நமக்கு அவசியமானவை. இது பற்றி விளக்கும் 1689 விசுவாச அறிக்கை முதலாவது அதிகாரத்தில் பின்வருமாறு சொல்லுகிறது, "அவரது மகிமைக்கும், மனிதனுடைய இரட்சிப்பிற்கும், விசுவாசத்திற்கும், வாழ்க்கைக்கும் அவசியமான தேவனுடைய எல்லாத் திட்டங்களும் பரிசுத்த வேதாகமத்தில் திட்டவட்டமாக (வெளிப்படையாக) அல்லது உள்ளடக்கமாக (இன்றியமையாத நிலையில்) காணப்படுகின்றது." வெளிப்படையான போதனைகளும், நாம் வரலாற்றின் மூலமும், உவமைகள் மூலமும், உதாரணங்களின் மூலமும் அறிந்துகொள்ளுகின்ற போதனைகளும் சம அதிகாரமுள்ளவை. அவையனைத்தையும் கிறிஸ்தவர்கள் பின்பற்ற வேண்டியது அவசியம்.*

*கர்த்தர் வேத சத்தியங்களை நமக்குக் கொடுத்திருக்கும் முறை பற்றி நான் இதுவரை விளக்கியதற்கும் திருச்சபை அங்கத்துவத்திற்கும் பெருந் தொடர்பு இருக்கின்றது. ஏனெனில், 'ஒருவர் சபையில் அங்கத்தவராக இருக்க வேண்டும்' என்ற வார்த்தைகளை நாம் வேதத்தில் காணமுடியாவிட்டாலும் சபை அங்கத்துவம் பற்றிய போதனைகளை வேதம் பல இடங்களில் வரலாற்று நிகழ்ச்சிகள், உதாரணங்கள் மற்றும் போதனைகள் மூலமாகத் தெளிவாக விளக்குகின்றது. அது பற்றிய போதனைகளைக்*

*கர்த்தர் பத்துக் கட்டளைகளைப் போல ஒரே இடத்தில் விளக்கமாகத் தரவில்லை. திருச்சபை பற்றிய சுவிசேஷ நூல்களில் கர்த்தர் தந்திருக்கும் விளக்கங்களைக் கொண்டும், அப்போஸ்தலர் நடபடிகளில் திருச்சபை அமைக்கப்பட்ட விதத்தை அவர் விளக்கியிருக்கும் வரலாற்று நிகழ்ச்சிகளைக் கொண்டும், புதிய ஏற்பாட்டு நிருபங்களில் தரப்பட்டிருக்கும் உதாரணங்கள், போதனைகளின் மூலமுமே நாம் திருச்சபை அங்கத்துவத்தின் அவசியத்தைப் பற்றி விளக்கமாக அறிந்துகொள்ள முடிகிறது.*

*திருச்சபை அங்கத்துவம் அவசியமானது. அதை ஏற்படுத்தி வைத்திருப்பவர் திருச்சபையின் தேவனாகிய இறையாண்மை யுள்ள கர்த்தர். அது ஏன் அவசியமானது என்பதற்கான காரணங்களை இப்போது விளக்க விரும்புகிறேன்.*

**(1) அது பற்றிய போதனைகள் உள்ளடக்கமாக அதே நேரம் தெளிவாக வேதத்தில் விளக்கப்பட்டிருப்பதால் அது அவசிய மாகிறது.**

*இதைப் பின்வரும் வேதப் பகுதிகளை ஆராய்வதன் மூலம் அறிந்துகொள்ளுகிறோம்.*

**(அ) அப்போஸ்தலர் நடபடிகள் 2:41.**

*இந்தப் பகுதியில் பெந்தகொஸ்தே தினத்தில் பேதுருவின் பிரசங்கத்தின் காரணமாக யூதர்கள் கூடி வந்திருந்த பெருங்கூட்டத்தில் இருந்து மூவாயிரம் பேர் கிறிஸ்துவை விசுவாசித்து அவர்களைக் கொண்டு புதிய ஏற்பாட்டு சபை நிறுவப்பட்டதாக விளக்கப்படுகின்றது. மேற்கூறப்பட்ட வசனம் விளக்குவதைப் புரிந்துகொள்ள இந்தப் பகுதி முழுவதையும், அத்தோடு அதன் பின்னணியையும் ஆராய்வது அவசியம். பெந்தகொஸ்தே தினத்திற்கு முன்பு இயேசு கிறிஸ்துவின் வார்த்தையை ஏற்று பதினொரு அப்போஸ்தலர் களும் எருசலேமுக்கு வந்து ஒரு வீட்டின் மேலறையில் (2:13) தங்கியிருந்தார்கள். யூதாஸ் தற்கொலை செய்து கொண்டதால் அவர்கள் கிறிஸ்துவின் கட்டளையின்படி பன்னிரெண்டாவது*

அப்போஸ்தலனை தெரிவு செய்தார்கள். அந்த மேலறையில் அப்போஸ்தலர்களைத் தவிர வேறு விசுவாசிகளும் சேர்ந்து 120 பேர் இருந்தனர் (2:13-15). பெந்தகொஸ்தே தினத்தில் கிறிஸ்துவின் வாக்குப்படி பரிசுத்த ஆவியானவர் வந்திறங்கியபின் பேதுருவின் பிரசங்கத்தின் மூலம் பாவ நிவாரணம் பெற்று விசுவாசிகளான 3000 பேர் இவர்களோடு இணைக்கப்பட்டார்கள். இவர்கள் எல்லோருக்கும் அன்று ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டது. இதன் மூலமாக சபை அன்றைக்கு நிறுவப்பட்டு அவர்கள் எல்லோரும் இணைந்து திருவிருந்தில் கலந்துகொண்டார்கள், ஐக்கியத்தை அனுபவித்தார்கள். இந்தப் பகுதியில் ‘விசுவாசிகளைக் கொண்டு ஆரம்ப சபை இப்படியாக அமைக்கப்பட்டது’ என்ற வார்த்தைகளை நாம் காணாவிட்டாலும் அதைத்தான் விளக்குகிறது என்பதை இந்தப் பகுதியை ஆராய்ந்து படிக்கிறபோது விளங்கிக்கொள்ள முடிகிறது. இங்கே சபை அங்கத்துவத்தை எப்படிக் காண்கிறோம்? அன்று கூடி வந்திருந்த பெரிய கூட்டத்தில் இருந்து 3000 பேர் மட்டும் பிரித்தெடுக்கப்பட்டு ஏற்கனவே இருந்த 120 பேரோடு இணைக்கப்பட்டார்கள் என்பதை 2:41 ‘சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள்’ என்ற வார்த்தையின் மூலம் விளக்குகிறது. இது ஆங்கிலத்தில் ‘added to them’ என்றிருக்கிறது. மூவாயிரம் பேர் ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டார்கள் என்று வெறுமனே சொல்லி நிறுத்திவிடாமல் கர்த்தர் அவர்கள் ஏற்கனவே இருந்தவர்களோடு இணைக்கப் பட்டார்கள், அதன் மூலம் சபை நிறுவப்பட்டது என்பதை அழுத்தமாகத் தெரிவிக்கிறார்.

யூதர்களாக இருந்து யூத மதவழக்கங்களைப் பின்பற்றி வந்திருந்த இவர்கள் அன்று ஞானஸ்நானம் பெற்று திருவிருந்தில் கலந்துகொண்டு ஏனைய விசுவாசிகளோடு எப்படி ஐக்கியத்தில் வர முடிந்தது? 42ம் வசனத்தில் விளக்கப்பட்ட காரியங்களைச் எப்படிச் செய்ய முடிந்தது? பேதுரு அவர்களுக்கு சுவிசேஷத்தை மட்டும் சொல்லாமல் அவர்கள் மனந்திருந்தி கிறிஸ்துவை விசுவாசித்த பின் திருச்சபை பற்றியும் அதன் வாழ்க்கை முறை பற்றியும் நிச்சயமாக அவர்களுக்கு விளக்கியிருப்பார். எந்த

*விஷயத்தைப் பற்றியும் அறிந்துகொள்ளாமல் பின்பற்ற முடியாது. இயேசுவிடம் இருந்து பெற்றுக் கொண்ட போதனைகளை பேதுருவும் ஏனைய அப்போஸ்தலர்களும் அன்றைக்கு புதிய விசுவாசிகளுக்குத் தெளிவாகப் போதித்து சபை அங்கத்துவத்துக்கு அவர்களைத் தயார் செய்த பிறகே ஞானஸ்நானம் அளித்திருப்பார்கள். அதனால்தான் ஞானஸ்நானம் பெற்றவர்களால் ஒருமனப்பட்டு மற்றவர்களோடு குழப்பமில்லாமல் இணைந்து வாழமுடிந்தது.*

### (ஆ) அப்போஸ்தலர் நடபடிகள் 4:2337

*இந்தப் பகுதி இயேசுவின் பேரில் பிரசங்கம் செய்யக் கூடாதென்று அப்போஸ்தலர்களை யூதர்கள் பயமுறுத்தி அனுப்பியதை விளக்குகிறது. அதற்குப் பிறகு அப்போஸ்தலர்கள் தங்களைச் சார்ந்தவர்களை (4:23) போய்ச் சேர்ந்து, அதாவது சபையைப் போய்ப்பார்த்து நடந்த விஷயங்களை அவர்களுக்கு அறிவித்தார்கள். அதைக்கேட்ட சபையார் அனைவரும் ஒருமனதோடு தேவனை நோக்கி ஜெபித்தார்கள். இதிலிருந்து தெளிவான எண்ணிக்கையைக் கொண்டு சபையிருந்ததையும் பேதுருவும், யோவானும் அவர்களோடு சேர்ந்து ஜெபித்ததையும் பார்க்கிறோம். இந்த சபை பற்றியே மறுபடியும் விசுவாசிகளாகிய திரளான கூட்டம் என்று 32ம் வசனத்தில் விளக்கப்பட்டிருக்கிறது. இதன் மூலம் சபை, சபைக்கு வெளியிலிருந்த புறஜாதியினர் என்ற இரண்டு கூட்டத்தை மட்டுமே அன்று காண்கிறோம். விசுவாசிகள் சபையோடு தங்களை இணைத்துக் கொண்டார்கள். சபை தன்னைச் சார்ந்த அங்கத்தவர்கள் யார் என்ற எண்ணிக்கையைத் தெளிவாக அறிந்திருந்து தொடர்ந்து வளர்ந்தது. அங்கத்துவ அமைப்பில்லாத ஒரு குழப்பமான கூட்டமாக சபையை நான் அப்போஸ்தல நடபடிகளில் பார்ப்பதில்லை.*

### (இ) அப்போஸ்தலர் நடபடிகள் 5:11, 13

*இந்தப் பகுதியும் சபை அங்கத்துவம் பற்றித் தெளிவாக விளக்குகிறது. ஏற்கனவே 3120 பேராகத் தெளிவான எண்ணிக்கையோடிருந்த சபை மேலும் வளர்ந்து 5000 பேராக இருந்ததை 4:4 விளக்குகிறது. இவர்கள் மட்டுமே திருச்சபை*

அங்கத்தவர்கள். இவர்களுக்கு வெளியில் இருந்தவர்கள் புறஜாதியினர் என்பதை நாம் உணர வேண்டும். இவர்கள் எங்கு எப்படிக் கூடிவந்து ஆராதனை செய்தார்கள் என்பது அல்ல நமக்கு முக்கியம். திருச்சபை இத்தனைப் பேரை மட்டுமே கொண்டிருந்தது என்பதை பரிசுத்த ஆவியானவர் நமக்கு எண்ணிக்கையைத் தந்து உணர்த்துகிறார் என்பதையும் அதன் மூலம் சபை அத்தனை அங்கத்தவர்களை மட்டும் கொண்டு முறையான சபையாக நடைமுறையில் இருந்து வந்தது என்பதையும் நாம் உணர்வது அவசியம். யார் யார் நம்மைச் சேர்ந்தவர்கள், யார் யார் நம்மைச் சேராதவர்கள் என்ற குழப்ப நிலையில் இன்று பல இடங்களிலும் நாம் பார்ப்பதைப் போல அன்று சபை கூடிவரவில்லை. அப்போஸ்தலர்களுக்கும், சபைக்கும் யார் தங்களைச் சேர்ந்தவர்கள் என்ற தெளிவான விபரமிருந்தது.

இந்த ஐந்தாம் அதிகாரத்தின் 11, 13 வசனங்களும் இதை மேலும் உறுதிப்படுத்துகின்றன. இங்கே அனனியாவும், அவனுடைய மனைவி சப்பிராளும் எப்படியோ சபையில் போலித்தனமாக இணைந்து அப்போஸ்தலர்களையும் சபையையும் ஏமாற்றினார்கள். சபையில் அவர்கள் விசாரிக்கப்பட்டு கர்த்தர் உடனடியாகத் தண்டனையையும் வழங்கினார். அதற்குப் பிறகு நாம் வாசிக்கின்ற வசனங்கள் மிகவும் ஆழமானவை. 11ம் வசனம், இந்த நிகழ்ச்சி சபைக்குப் பெரிய பயத்தை ஏற்படுத்தியதாக விளக்கி இந்நிகழ்ச்சிக்கும் சபைக்கும் இருந்த தொடர்பை விளக்குகிறது. அதற்குப் பிறகு 13ம் வசனம் சபைக்கு வெளியில் இருந்த ஒருவரும் அதன் பிறகு சபையில் சேருவதற்கு துணியவில்லை என்று விளக்குகிறது. அன்றைக்கு அப்போஸ்தலர்கள் செய்து வந்த அற்புதங்களைப் பார்த்தும், வேறு சுய நல நோக்கங்களுக்காகவும் சிலர் சபையில் இணைய விரும்பியிருக்கலாம். கர்த்தர் இந்த நிகழ்ச்சி மூலம் சபை பரிசுத்தமானது என்பதையும், மெய் விசுவாசிகள் மட்டுமே அதில் இணைய முடியும் என்பதையும் தெளிவாகக் காட்டுகிறார். அன்று நடந்த நிகழ்ச்சிக்குப் பிறகு சபைக்கு வெளியில் இருந்தவர்கள் சபையில் சேரத் துணியவில்லை. இதிலிருந்து சபை விசுவாசிகளை மட்டுமே அங்கத்தவர்களாகக் கொண்டு இயங்கி வந்ததையும், யார்